**செ.வெ.எண். 123** **நாள்: 01.09.2016**

# சென்னை மாவட்டத்தை உள்ளடக்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தை உள்ளடக்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் 01.01.2017–ஆம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு 2017–ஆம் ஆண்டின் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது. இச்சுருக்க முறை திருத்தம் தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.09.2016) ரிப்பன் மாளிகையில் வெளியிட்டார். மேற்படி வரைவு வாக்காளர் பட்டியல் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் 4,5,6,8,9,10 மற்றும் 13 மற்றும் வாக்குச்சாவடி மையங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். பொதுமக்கள் தங்களது பெயர்கள் மற்றும் குடும்பத்தாரர்களது பெயர்கள் குறித்த விபரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா அல்லது இல்லையா என்பது குறித்து சரிபார்த்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காமல் உள்ளவர்கள், மற்றும் 01.01.2017 அன்று 18 வயது நிறைவு அடைகின்றவர்கள் (01.01.1998–ஆம் தேதிக்கு முன்பிறந்தவர்கள்) படிவம் 6–னை பூர்த்தி செய்தும், பெயர்கள் நீக்கம் தொடர்பாக படிவம் 7–னை பூர்த்தி செய்தும், பட்டியலில் திருத்தம் தொடர்பாக படிவம் 8–னை பூர்த்தி செய்தும், சட்டமன்ற தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 8–Aயினை பூர்த்தி செய்தும், அதற்கான ஆவண ஆதார நகலினை இணைத்தும், சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரின் அலுவலகத்தில் 01.09.2016 முதல் 30.09.2016 முடிய உள்ள காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம்.

மேலும், 11.09.2016 மற்றும் 25.09.2016 (ஞாயிற்றுக்கிழமைகளில்) ஆகிய நாட்களில் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. அது சமயம் பொதுமக்கள் உரிய படிவங்களை பெறவும், பூர்த்தி செய்த படிவங்களை அளிக்கவும், இந்தச்சிறப்பு முகாம்களை

பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் பொதுமக்கள் இணையதளம் மூலமாகவும் தங்களுடைய பெயர்கள் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள விண்ணப்பிக்கலாம். (இணையதள முகவரி – www.elections.tn.gov.in). விண்ணப்பங்களை வலைதளம் மூலமே மேற்கொள்ள வாக்காளர்கள் கோரப்படுகின்றனர்.

சென்னை மாவட்டத்தில் கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது 3699 வாக்குச்சாவடிகளும், 72 துணை வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டிருந்தன. தற்சமயம் வாக்குச்சாவடிகள் மறுசீரமைக்கப்பட்டு, சென்னை மாவட்டத்தில் 3768 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, இன்று வெளியிடப்படும் வாக்காளர் பட்டியல் அதன் அடிப்படையில் வெளியிடப்படுகிறது, அதிகபட்சமாக பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் 270 வாக்குச்சாவடிகளும், குறைந்தபட்சமாக துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 177 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த சட்டப்பேரவை தேர்தல் 2016–யினை முன்னிட்டு 29.04.2016 அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி, ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை 1966885 ஆகும். பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 2007198 ஆகும். இதர வாக்காளர்களின் எண்ணிக்கை 945 ஆகும். சென்னை மாவட்டத்தின் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 3975028 ஆகும்.

நடைபெற்று முடிந்த தொடர்திருத்தத்தில் சென்னை மாவட்டத்தில் 6864 ஆண் வாக்காளர்கள் மற்றும் 7553 பெண் வாக்காளர்கள் மற்றும் 5 இதர வாக்காளர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் 1108 ஆண் வாக்காளர்கள், 983 பெண் வாக்காளர்கள் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலின்படி, சென்னை மாவட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை சட்டமன்றத்தொகுதி வாரியாக கீழ்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | சட்டமன்ற தொகுதியின் எண். மற்றும் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதர வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | 125123 | 130788 | 108 | 256019 |
| 2. | எண்.12, பெரம்பூர் | 144416 | 147090 | 44 | 291550 |
| 3. | எண்.13, கொளத்தூர் | 127864 | 132435 | 59 | 260358 |
| 4. | எண்.14, வில்லிவாக்கம் | 123854 | 127277 | 63 | 251194 |
| 5. | எண்.15, திரு.வி.க.நகர் | 104824 | 110578 | 36 | 215438 |
| 6. | எண்.16, எழும்பூர் | 95301 | 96566 | 37 | 191904 |
| 7. | எண்.17, இராயபுரம் | 94756 | 97990 | 47 | 192793 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | எண்.18, துறைமுகம் | 98920 | 89590 | 61 | 188571 |
| 9. | எண்.19, சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி | 113622 | 117404 | 24 | 231050 |
| 10. | எண்.20, ஆயிரம் விளக்கு | 115776 | 120506 | 82 | 236364 |
| 11. | எண்.21, அண்ணாநகர் | 140540 | 144591 | 66 | 285197 |
| 12. | எண்.22, விருகம்பாக்கம் | 147156 | 145598 | 80 | 292834 |
| 13. | எண்.23, சைதாப்பேட்டை | 139843 | 142601 | 73 | 282517 |
| 14. | எண்.24, தியாகராய நகர் | 122383 | 123590 | 46 | 246019 |
| 15. | எண்.25, மயிலாப்பூர் | 128058 | 135482 | 34 | 263574 |
| 16. | எண்.26, வேளச்சேரி | 150205 | 151682 | 90 | 301977 |
| | மொத்தம் | 1972641 | 2013768 | 950 | 3987359 |

வாக்காளர் எண்ணிக்கை குறைந்தபட்சமாக எண்.18, துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 188571 வாக்காளர்களும், அதிகப்பட்சமாக எண்.26, வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில் 301977 வாக்காளர்களும் உள்ளனர்.

ஜனநாயகத்தினை வலுப்படுத்த, தகுதியுள்ள அனைத்து பொதுமக்களும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற ஏதுவாக வரைவு வாக்காளர் பட்டியலினை பார்வையிட்டு, வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டத் தேர்தல் அலுவலர்/
ஆணையர்

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**